# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரதமரின் விவசாயிகள் உதவித் தொகை திட்டத்தை (பிஎம் கிஸான்) அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், இத்திட்டத்துக்கு ரூ.3.15 லட்சம் கோடி ஒதுக்கவும் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

I. மத்திய அரசின் லட்சிய திட்டங்களின் ஒன்றான பிரதமரின் விவசாயிகள் உதவித் தொகை திட்டம் கடந்த 2019-இல் தொடங்கப்பட்டதாகும். இத்திட்டத்தின்கீழ் தகுதியுள்ள விவசாயிகளுக்கு நேரடி பணப் பரிமாற்ற முறையில் மூன்று தவணைகளாக ரூ.2,000 வீதம் ஆண்டுக்கு ரூ.6,000 வழங்கப்படுகிறது.

II. தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கண்ட திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (2026-27 முதல் 2030-31 வரை) நீட்டிப்பதுடன், ரூ.3,15,614 கோடி ஒதுக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டது.

III. விவசாயிகள் உதவித் தொகை திட்டத்தின்கீழ் இதுவரை 23 தவணைகள் மூலம் ரூ.4.47 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை விவசாயிகளின் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. 23-ஆவது தவணையில் மட்டும் ரூ.18,984 கோடிக்கும் மேற்பட்ட தொகை விடுவிக்கப்பட்டு 9.49 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் பலனடைந்தனர். இத்திட்ட பயனாளிகளில் நான்கில் ஒருவர் பெண் விவசாயி என்பது கூடுதல் சிறப்பாகும். அதாவது, பெண்விவசாயிகளுக்கு இதுவரை ரூ.1.06 லட்சம் கோடிக்கு மேல் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

IV. நீதி ஆயோக்கின் மதிப்பீட்டின்படி, 92 சதவீதத்துக்கும் அதிகமான பயனாளிகள் மத்திய அரசின் உதவித்தொகையை வேளாண் பணிகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர்; தங்களின் வருவாய் அதிகரித்துள்ளதாகவும், முறைசாரா கடன்களை சார்ந் திருப்பது குறைந்துள்ளதாகவும் 85 சதவீத விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

V. தற்போது திட்டம் நீட்டிக்கப்படுவதன் மூலம் விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம், வேளாண் இயந்திரங்கள், பிற வேளாண் தேவைகளில் உரிய

நேரத்தில் முதலீடு செய்ய விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மொராக்கோ நிலப்பகுதியை ஒட்டி ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் உள்ள சீயடா பகுதிக்குள் கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 60,000 அகதிகள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளனர்.

I. இது அந்நகரின் வழக்கமான மக்கள்தொகையில் 70 சதவீதமாகும். எல்லைப் பகுதியில் ஏற்பட்ட மோதல் மற்றும் கடலில் மூழ்கிய சம்பவங்களில் சிக்கி இதுவரை 57 அகதிகள் உயிரிழந்தனர்.

II. ஸ்பெயினுக்குள் கடல் வழியாக வரும் சட்டவிரோத குடியேறிகளை உனடியாகத் திருப்பி அனுப்பாமல், உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று ஸ்பெயின் உச்சநீதிமன்றம் அண்மையில் ஒரு தீர்ப்பை வழங்கியது.

III. இத்தீர்ப்பைத் தவறாக சித்தரித்து, 'கடலில் நீந்தி சீயடா எல்லைக்குள் நுழைந்து விட்டால், மொராக்கோவுக்கு யாரும் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்று மனிதக் கடத்தல் கும்பல்கள் வதந்தி பரப்பியதே இந்த நெருக்கடிக்குக் காரணமாக ஸ்பெயின் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

IV. எல்லையில் குவிந்த அகதிகளைக் கலைக்க மொராக்கோ பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீரைப் பீய்ச்சியடித்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

V. தரைவழி எல்லைகள் மூடப்பட்ட போதிலும், பல நூற்றுக்கணக்கான அகதிகள் கடலில் நீந்தியும், தடுப்பு வேலிகளைத் தாண்டியும் ஸ்பெயின் பகுதிக்குள் நுழைந்தனர்.

VI. ‘இந்த எல்லை மீறல், ஸ்பெயினின் இறையாண்மைக்கு விடப்பட்ட சவால்' என அந்நாட்டு பிரதம பெட்ரோ சான்செஸ் கண்டனம் தெரிவித்தார்.

3. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், இந்திய ஜூடோ போட்டியாளர்களான அஸ்மிதா டே, ஹர்ஷ் சிங் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்று அசத்தினர். அதில் யாமினி மௌரியா வெள்ளி வென்றார். அத்துடன், இந்திய பளுதூக்குதல் வீரர் லவ்பிரீத் சிங் வெள்ளிப் பதக்கம் வெல்ல, மகளிருக்கான வட்டு எறிதலில் சீமா காளிராம்னா வெண்கலப் பதக்கம் வென்றார். நடப்பு காமன்வெல்த் போட்டிகளில் இந்தியாவுக்கான தங்கப் பதக்க

எண்ணிக்கை 5-ஆக அதிகரித்துள்ளது. பளுதூக்குதலில் மட்டும் இந்தியாவின் பதக்கங்கள் 8-ஆக உயர்ந்துள்ளன.

4. ஜுடோவில் மகளிர் 48 கிலோ பிரிவில் அஸ்மிதா டே, ஆடவர் 60 கிலோ பிரிவில் ஹர்ஷ் சிங் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்று அசத்த, மகளிர் 57 கிலோ பிரிவில் யாமினி மௌரியா வெள்ளி வென்றார். காமன்வெல்த் ஜூடோவில் இந்தியாவுக்காக தங்கம் வென்ற முதல் இந்தியராக அஸ்மிதா வரலாறு படைத்தார்.
   I. இதில் அஸ்மிதா டே, நேரடியாக காலிறுதியில் விளையாடி, அதில் ஸ்காட்லாந்தின் ஈவா‌எவிங்கை வீழ்த்தினார் (100-0). பின்னர் அரையிறுதியில் அதே நாட்டின் சம்மர் ஷாவையும் (1–0) வீழ்த்தி, இறுதிக்கு முன்னேறினார்.

5. ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, அடுத்த ஆண்டு (2027) தென்னாப்பிரிக்கா, ஜிம்பாப்வே, நமீபியா ஆகிய 3 நாடுகளின், 12 நகரங்களில் நடைபெறவுள்ளது.
   I. இதில் தென்னாப்பிரிக்காவில், ஜோஹன்னஸ்பர்க், ஷ்வேன், கேப்டவுன், டர்பன், கெபெர்ஹா, புளோம்ஃபான்டெய்ன், பார்ல், குகோம்போ சிட்டி ஆகிய 8 நகரங்களில் நடைபெறவுள்ளது.
   II. ஜிம்பாப்வேயில் ஹராரே, புலா வயோ, விக்டோரியா ஃபால்ஸ் ஆகிய 3 நகரங்களிலும், நமீபியாவில் விண்டோக் நகரத்திலும் உலகக் கோப்பை ஆட்டங்கள் விளையாடப்படவுள்ளன.
   III. ஐசிசி-யின் இந்த 14– ஆவது ஒருநாள் உலகக் கோப்பை போட்டியானது, அக்டோபர் 4 முதல் நவம்பர் 21 வரை விளையாடப்படவுள்ளது. புதிய போட்டி முறையில் இதில், 57 ஆட்டங்கள் நடைபெறவுள்ள.
   IV. ஒருநாள் உலகக் கோப்பை போட்டி, ஆப்பிரிக்க கண்டத்தில் 24 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறவுள்ளது. கடைசியாக 2003-இல் தென்னாப்பிரிக்கா, ஜிம்பாப்வே, கென்யா ஆகியவை இணைந்து அந்தப் போட்டியை நடத்தின.

6. நாடு முழுவதுமாக கேலோ இந்தியா திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில், அடுத்த 5 ஆண்டுகளுக்காக அந்தத் திட்டத்துக்கு ரூ.29,054 கோடியை ஒதுக்கீடு செய்ய, மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

I. 2030 காமன்வெல்த் போட்டியை நடத்தவுள்ள இந்தியா, 2036 ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெறும் முனைப்பில் உள்ளது. இந்நிலையில், அந்தப் போட்டிகளை கருத்தில் கொண்டு கேலோ இந்தியா திட்டத்தின் மூலமாக நாட்டின் கிராமப்புற பகுதிகள் உள்பட, பின்தங்கிய பகுதிகளில் இருந்தும் திறமையான வீரர், வீராங்கனைகளை உருவாக்க, மத்திய அரசு மேற்கண்ட தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது.

II. அத்துடன், நாட்டிலுள்ள விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களுக்கான உதவிக்காக, அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.7,387 கோடியை ஒதுக்கீடு செய்யும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

III. கடந்த 2017-இல் தொடங்கப்பட்ட கேலோ இந்தியா திட்டத்தின் கீழ், தற்போது வரை சுமார் 2,800 விளையாட்டு வீரர், வீராங் கனைகள் அரசு நிதியுதவியுடன் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொண்டு வருகின்றனர்.

7. ரஷிய கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்யும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது 100 சதவீதம் வரி விதிக்கும் அமெரிக்க மசோதாவை உன்னிப்பாக கவனிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

I. அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேலவை (செனட்) ஒப்புதல் அளித்துள்ள இந்த மசோதா, 100 சதவீதம் வரி விதிக்க அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு அதிகாரம் அளிக்கும்.

8. மக்களவையில் எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே எந்த விவாதமும் நடத்தப்படாமல் பிறப்பு, இறப்பு பதிவு சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

I. அம்சங்கள் என்னென்ன?:

- நாட்டில் பிறப்பு, இறப்பு பதிவை உரிய நேரத்துக்குள் மேற்கொள்ள மக்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த 1969-ஆம் ஆண்டின் பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள புதிய மசோதா வழிவகுக்கிறது.
- தற்போதுள்ள சட்டத்தின் படி, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயம் என்பதுடன் ஓராண்டுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக நடுவரிடமிருந்து உத்தரவு பெறுவது அவசியம். புதிய மசோதா வின்படி,

இந்தப் பிரிவு 2 ஆண்டுகள் வரையிலான தாமதத்துக்கு தொடர்ந்து பொருந்தும். 2 ஆண்டுகளுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், முதல்நிலை குற்றவியல் மாஜிஸ்திரேட் பிறப்பிக்கும் உத்தரவின் அடிப்படையில் மட்டுமே பதிவு மேற்கொள்ளப்படும்.

9. ஆழ்கடல் வளங்கள் மூலம் இந்தியாவின் எரிசக்தி எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு பிரம்மாண்டமான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

I. திட்டத்தின் கண்ணோட்டம் மற்றும் ஒப்புதல்

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, மொத்தம் ₹84,084 கோடி மதிப்பீட்டிலான "சமுத்ரமந்தன்" (Samudramanthan) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- இத்திட்டம் முதன்முதலில் 2025-ஆம் ஆண்டு சுதந்திர தின உரையின் போது பிரதமரால் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டம் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் செயல்படுத்தப்பட்டு, 2030–31 நிதியாண்டில் நிறைவடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் முன்னின்று நடத்துகிறது.

II. முக்கிய நோக்கங்கள்

- ஆழ்கடல் மற்றும் மிக ஆழ்கடல் பகுதிகளில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இருப்புக்களைக் கண்டறிதல்.
- கண்டறியப்பட்ட எரிசக்தி வளங்களை உற்பத்தி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் தேவையான பொதுவான உள்கட்டமைப்பை நிறுவுதல்.
- உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தேசிய எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் வளர்ந்த நாடாக மாறுவதற்கான இலக்கை விரைவுபடுத்துதல்.

III. விரிவான நிதி ஒதுக்கீடு

மொத்த பட்ஜெட் பல முக்கிய செயல்பாட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

- ₹43,200 கோடி (பட்ஜெட்டில் 50%-க்கும் மேல்) ஆழ்கடல் பகுதிகளில் அதிக ஆபத்து மற்றும் அதிக செலவு கொண்ட துளையிடும் பணிகளுக்காக

ஒதுக்கப்பட்டுள்ளது.

- கடல்சார் எரிசக்தி தரவுகளைப் பெறுவதற்கும் செயலாக்குவதற்கும் ₹28,534 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- எரிசக்தி பிரித்தெடுப்பிற்கான பொதுவான உள்கட்டமைப்பை உருவாக்க ₹10,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- பிரத்யேக எரிசக்தி உற்பத்தி மற்றும் சேவை மண்டலங்களை அமைக்க ₹2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மிகவும் ஆழமான கடல் சூழலில் ஆய்வுத் துளையிடல் பணிகளுக்கு, ஒரு கிணறுக்கு ₹650 கோடி வரை நிதி உதவியை அரசு வழங்கும்.

IV. தொழில்நுட்ப மற்றும் மூலோபாய முக்கியத்துவம்

- இத்திட்டம் டிஜிட்டல் அமைப்பு மேலாண்மை, திறன் மேம்பாடு மற்றும் மேம்பட்ட நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- உலகளாவிய நிபுணத்துவம் மற்றும் முதலீட்டைக் கொண்டுவருவதற்காக சர்வதேச கூட்டாண்மைகளை வளர்ப்பதில் இது கவனம் செலுத்துகிறது.
- இத்திட்டம் "மேக் இன் இந்தியா" (Make in India) மற்றும் "சுயசார்பு இந்தியா" (Atmanirbhar Bharat) ஆகியவற்றுடன் இணைந்து, மிகப்பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

V. எதிர்பார்க்கப்படும் தாக்கம் மற்றும் எரிசக்தி சூழல்

- 600 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்க்கு இணையான ஹைட்ரோகார்பன் இருப்புக்கள் கண்டறியப்படும் என்று நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.
- கடந்த பத்தாண்டுகளில், இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயைச் சார்ந்திருக்கும் இந்தியாவின் நிலை 77%-லிருந்து 88%-ஆக அதிகரித்துள்ளது; மேலும், நாட்டின் இயற்கை எரிவாயுத் தேவையில் ஏறக்குறைய பாதி அளவு இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது.
- அண்மைய மேற்கு ஆசிய மோதல்கள் மற்றும் அதனால் ஏற்பட்ட உலகளாவிய விநியோகத் தடைகள் காரணமாக, உள்நாட்டு கடல்சார் எரிசக்தி வளங்களை மேம்படுத்துவது ஒரு முக்கிய தேசிய முன்னுரிமையாக மாறியுள்ளது.

'சமுத்ரமந்தன்' (Samudramanthan) திட்டம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க

மைல்கல்லாக அமையும்; இது வெளிநாட்டு எரிசக்தியைச் சார்ந்திருக்கும் இந்தியாவின் நிலையைக் கணிசமாகக் குறைப்பதோடு, நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்.